பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

15 04 2025 **TUESDAY** **7.15 AM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நாட்டில் போதைப்பொருள் கடத்தலை வேரறுக்க மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருவதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

2. தேசிய நெடுஞ்சாலை விருதுகளை மத்திய அமைச்சர் திரு நிதின் கட்கரி இன்று புதுதில்லியில் வழங்குகிறார்.

3. உத்தரப்பிரதேச மாநிலம் லக்னோவில் உள்ள லோக்பந்து மருத்துவமனையில் நேற்று நள்ளிரவு ஏற்பட்ட தீ விபத்து குறித்து அம்மாநில அரசு விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளது.

4. அ ணுசக்தி திட்டம் தொடர்பாக அமெரிக்கா - ஈரான் இடையிலான இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தை ரோமில் நடைபெறவுள்ளது.

5. ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில், பஞ்சாப் - கொல்கத்தா அணியை எதிர்கொள்கிறது.

<u>*--- இனி விரிவான செய்திகள் ---*</u>

**<<<<<<<>>>>>>**

நாட்டில் போதைப்பொருள் கடத்தலை வேரறுக்க மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருவதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளபதிவில், குஜராத்தில், இந்திய கடலோர காவல்படை மற்றும் குஜராத் தீவிரவாத எதிர்ப்பு பிரிவு இணைந்து சர்வதேச கடல் எல்லைப்பகுதியில் இருந்து ஆயிரத்து 800 கோடி ரூபாய் மதிப்பிலான 300 கிலோ அளவிலான போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டியுள்ளார்.

**<<<<<<<>>>>>>**

தேசிய நெடுஞ்சாலை விருது வழங்கும் விழா புதுதில்லியில் இன்று நடைபெறுகிறது.

இந்த விழாவில் நெடுஞ்சாலைகளை கட்டமைப்பதில், புதுமைகளை மற்றும் புதிய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்திய தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு மத்திய நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு நிதின் கட்கரி விருதுகளை வழங்குகிறார்.

இதனையொட்டி, ஒருநாள் கருத்தரங்கமும் நடைபெறுகிறது.

இதில், இந்த துறை சார்ந்த நிபுணர்கள் பலர் உரையாற்றுகின்றனர்.

அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதில், புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் மலைப்பாங்கான இடங்களில் சாலைகள் அமைப்பதில் உள்ள சவால்கள் மற்றும் உலக அளவில் இந்திய கட்டமைப்பு நிறுவனங்களின் பங்களிப்பு குறித்தும் விவாதிக்கப்படுகிறது.

**<<<<<<<>>>>>>**

உத்தரப்பிரதேச மாநிலம் லக்னோவில் உள்ள லோக்பந்து மருத்துவமனையில் நேற்று நள்ளிரவு தீ விபத்து ஏற்பட்டது.

தீவிர சிகிச்சை பிரிவில் இருந்த 200 நோயாளிகள் உட்பட பலர் பாதுகாப்பாக மாற்று இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று நள்ளிரவு இந்த மருத்துவமனையின் இரண்டாவது தளத்தில் தீ விபத்து ஏற்பட்டது.

இதனையடுத்து நோயாளிகள் அனைவரையும் பத்திரமாக மீட்குமாறு அம்மாநில முதலமைச்சர் திரு யோகி ஆதித்யநாத் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

அம்மாநில துணை முதலமைச்சர் திரு **'Brajesh Pathak'** உடனடியாக மருத்துவமனைக்கு சென்று மீட்புப்பணிகளை பார்வையிட்டார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மருத்துவமனை ஊழியர்களின் உடனடியான நடவடிக்கைகள் காரணமாக நோயாளிகள் பத்திரமாக மீட்கப்பட்டதாக கூறினார்.

இந்த தீ விபத்தில் உயிரிழப்போ, காயமோ யாருக்கும் ஏற்படவில்லை என்று அம்மாநில முதன்மை செயலர் திரு பார்த்தசாரதி சென் சர்மா தெரிவித்துள்ளார்.

அனைத்து நோயாளிகளும் உடனடியாக வேறு ஒரு மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளதாக கூறினார்.

இந்த தீ விபத்து மின்சார கசிவு காரணமாக ஏற்பட்டிருக்கலாம் என்று மருத்துவமனை கண்காணிப்பாளர் டாக்டர் அஜய் சங்கர் திரிபாதி தெரிவித்துள்ளார்.

இந்த தீ விபத்து குறித்து விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாக உத்தரப்பிரதேச அரசு தெரிவித்துள்ளது.

<<<<<<<>>>>>>

இமாச்சலப்பிரதேசத்தின் 78-ஆவது மாநில தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

1948-ஆம் ஆண்டு இதேநாளில், 30-ஆவது மாநிலமாக இமாச்சலப்பிரதேசம் அறிவிக்கப்பட்டது.

இதனையடுத்து, ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 15-ஆம் தேதி இமாச்சல மாநில தினமாக கொண்டாடப்படுகிறது.

இந்நாளையொட்டி, இன்று சம்பா மாவட்டத்தில் அம்மாநில முதலமைச்சர் திரு சுக்வீந்தர் சிங் சுகு தலைமையில் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

முதல் முறையாக பழங்குடியினர் வசிக்கும் பகுதியில் இந்த நிகழ்ச்சி நடைபெறுகிறது.

மாநிலத்தின் பல்வேறு கலாச்சாரங்களை பறைசாற்றும் வகையிலான நிகழ்ச்சிகளுக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

<<<<<<<>>>>>>

தெலங்கானா மாநில வருவாய் துறையின் சார்பில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள இணையதளத்தை அம்மாநில முதலமைச்சர் திரு ஏ ரேவந்த் ரெட்டி தொடங்கிவைத்தார்.

இந்த இணையதளம் மூலம், நில பதிவேடுகள் பாதுகாப்பாகவும், வைக்கப்படும் என்றும், இது வெளிப்படைதன்மையுடன் செயல்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த இணையதளம் மூலம் வழங்கப்படும் தகவல்களில் நில உரிமையாளர்கள் குறித்த விவரங்கள் அடங்கியிருக்கும் என்றும் அவர் கூறினார்.

கம்மம், முளகு, கொடாங்கல், கம்மா ரெட்டி ஆகிய பகுதிகளில் முதலில் இது நடைமுறைப்படுத்தப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

மேலும் வருவாய்த்துறை அதிகாரிகள் கிராமங்களுக்கு சென்று தீர்க்கப்படாத நிலம் தொடர்பான பிரச்சினைகளை வரும் மே மாதம் ஒன்றாம் தேதிக்குள் சரி செய்ய உத்தரவிட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இது மாநிலம் முழுவதும் ஜூன் இரண்டாம் தேதி அறிமுகப்படுத்தப்பட உள்ளதாகவும் திரு ரேவந்த் ரெட்டி தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

இந்தியாவால் தேடப்பட்டுவரும் பிரபல வைர வியாபாரி **'Mehul Choksi '** –ஐ பெல்ஜியம் காவல்துறையினர் கைது செய்து சிறையில் அடைத்துள்ளனர்.

மத்திய புலனாய்வு முகமையின் வேண்டுகோளின்படி, **Choksi** கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பஞ்சாப் நேஷனல் வங்கியில் கடன் பெற்று திருப்பி செலுத்தாமல் நாட்டைவிட்டு தப்பியோடிய அவரை பிடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த நிலையில், அவர் தற்போது கைது செய்யப்பட்டுள்ளார்.

இதுகுறித்து, மத்திய நிதித்துறை இணையமைச்சர் திரு பங்கஜ் சௌத்ரி, ஏழைகளின் பணத்தை சுரண்டியவர்கள் மீண்டும் திருப்பித்தர வேண்டும் என்ற பிரதமர் திரு நரேந்திர மோடியின் கருத்தை வலியுறுத்தும் விதத்தில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

<<<<<<<>>>>>>

அணுசக்தி திட்டம் தொடர்பாக அமெரிக்கா - ஈரான் இடையிலான இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தை ரோமில் நடைபெறவுள்ளது.

வரும் சனிக்கிழமை இந்த பேச்சுவார்த்தை நடைபெறவுள்ளதாக இத்தாலியின் வெளியுறவு அமைச்சர் திரு அன்டானியோ தஜானி அறிவித்துள்ளார்.

அமெரிக்கா, ஈரான் மற்றும் ஓமன் நாடுகள் கேட்டுக்கொண்டதையடுத்து, இந்த பேச்சுவார்த்தை ரோமில் நடைபெறவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

ஓமன் நாடானது அமெரிக்கா - ஈரான் இடையே மத்தியஸ்தராக செயல்பட்டு வருகிறது.

இந்த பேச்சுவார்த்தை ரோமில் எங்கு நடைபெறும் என்பது குறித்து விரைவில் அறிவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>>

பீகார் மாநிலத்தில், தேசிய ஜனநாயக கூட்டணியிலிருந்து ராஷ்ட்ரிய லோக் ஜனசக்தி கட்சி வெளியேறியுள்ளதாக அக்கட்சியின் தலைவர் திரு பசுபதி குமார் பராஸ் தெரிவித்துள்ளார்.

அம்பேத்கர் பிறந்தநாளையொட்டி நேற்று பாட்னாவில் நடைபெற்ற, கட்சி ஊழியர்களின் கூட்டத்தில் உரையாற்றிய அவர், பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியில் தொடர்ந்து இருப்பதில் கட்சிக்கோ, மக்களுக்கோ எந்தவித பயனும் இல்லை என்பதால் தாம் இந்த முடிவை எடுத்துள்ளதாக கூறினார்.

புதிய கூட்டணியில் இணைவது குறித்து விரைவில் அறிவிக்கப்படும் என்றும் திரு பசுபதி குமார் பராஸ் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

**Blue Origin New Shpherd – 31** என்ற விண்கலம் மூலம், அமெரிக்காவின் மேற்கு டெக்சாசிலிருந்து, அந்நாட்டின் பிரபல பாப் பாடகி **'Katyperry** உள்ளிட்ட ஆறு பெண்கள் விண்வெளிக்கு சென்று பத்திரமாக தரையிங்கி சாதனை படைத்துள்ளனர்.

விண்வெளியின் எல்லையென சர்வதேச அளவில் அங்கீரிக்கப்பட்ட கார்பன் கோட்டை கடந்து பூமியிலிருந்து 100 கிலோமீட்டர் கூடுதலான உயரத்திற்கு இந்த விண்கலம் சென்றது.

சுமார் 11 நிமிடம் வரை அவர்களின் விண்வெளிப்பயணம் அமைந்தது.

<<<<<<<>>>>>>

அமெரிக்காவின் தெற்கு கலிபோர்னியாவின் சாண்டியாகோ அருகே ஐந்து புள்ளி இரண்டு என்ற ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது.

நேற்று ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் லாஸ் ஏஞ்சல்ஸ் வரை உணரப்பட்டதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலநடுக்கத்தால் மக்கள் பீதியடைந்து வீட்டை விட்டு வெளியேறினர்.

சில இடங்களில பொருட்சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>>

உலக கலை நாள் இன்று கொண்டாடப்படுகிறது.

2012-ஆம் ஆண்டு யுனஸ்கோவின் பொது மாநாட்டில் ஏப்ரல் 15-ஆம் தேதியை உலக கலைநாளாக அறிவிக்கப்பட்டது.

உலக புகழ்பெற்ற இத்தாலிய கலைஞர் லியானார்டோ டா வின்சி-யின் பிறந்தநாளை சிறப்புக்கும் விதமாக இந்த நாள் தேர்ந்தெடுக்கப்பட்டது.

அவர் ஒரு சிறந்த ஓவியர் மட்டுமல்ல ஒரு சிற்பி, கட்டிக்கலைஞர், இசைக்கலைஞர், எழுத்தாளர் என பன்முகத் திறமை கொண்டவர்.

அவரை சிறப்பிக்கும் வகையில் இந்த தினம் கொண்டாடப்படுகிறது.

இதனையொட்டி, பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

<<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில், பஞ்சாப் - கொல்கத்தா அணியை எதிர்கொள்கிறது.

இப்போட்டி, பஞ்சாபில் இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.

லக்னோவில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் சென்னை அணி ஐந்து விக்கெட் வித்தியாசத்தில் லக்னோ அணியை வென்றது.

முதலில் விளையாடிய லக்னோ அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 7 விக்கெட் இழப்பிற்கு 166 ரன் எடுத்தது.

167 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய சென்னை அணி, 19 புள்ளி மூன்று ஓவரில் ஐந்து விக்கெட் இழப்பிற்கு 168 ரன் எடுத்து வெற்றிபெற்றது.

---------------

முனிச் ஓபன் டென்னிஸ் போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் ரோஹன் போபண்ணா – அமெரிக்காவின் **Ben Shelton** இணை இன்று, இங்கிலாந்தின் **Jamie Murray –** அமெரிக்காவின் ராஜீவ் ராம் இணையை எதிர்கொள்கிறது.

---------

பாரிஸில் நடைபெற்ற **Free Style** செஸ் கிராண்ட்ஸ்லாம் போட்டியில் நார்வேயின் **Magnus Carlsen** பட்டம் வென்றார்.

**<<<<<<<END>>>>>>**